மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 52/2016 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சண்முகராஜ் | நாள் | 07.01.2025 |
| தகப்பனார் பெயர் | சந்திரசேகரன் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:-**

1) என்னுடைய வீட்டுமனை நிலத்தை நான் எப்போது வாங்கினேன் என்றால், கடந்த 1988ம் வருடத்தில் வாங்கினேன். மேற்படி 1988ல் நான் கிரயம் பெற்றதாக சொல்லும் நிலத்திற்குரிய கிரய ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்திட்டுள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. எனக்கு விற்பனை செய்தவர்கள் யார் என்றால், கிருஷ்ணசாமி செட்டியார் மற்றும் J.U.ராமலிங்கம் ஆகியோர் எனக்கு விற்பனை செய்தனர்.

2) நான் பிறந்து வழந்தது எந்த ஊர் என்றால், ஜலகண்டாபுரம் தான். கிரயம் பெற்ற சொத்திற்கு அருகில் தான் நான் வசித்து வந்தேன். 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால், ஆரம்பத்திலிருந்தே தெரியும். நானும், அவர்களும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களை எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதியின் கணவர் நாகமாணிக்கம் என்பரை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். மேற்படி நாகமாணிக்கம் என்பரும் ஜலகண்டாபுரத்தை பூர்வீகமாக கொண்டவர் என்றால், சரிதான்.

3) நாகமாணிக்கத்தின் தந்தை பழனிசாமி செட்டியாருக்கு பாத்தியப்பட்ட நிலம் தாவா சொத்திற்கு வடக்காகவும், மேற்காகவும் அமைந்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. ச.எண்.226/8ல் மொத்தம் எவ்வளவு நிலம் உள்ளது என்பது குறித்தும், அதை யார் யார் அனுபவித்து வந்தனர் என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். ச.எண்.226/8ல் மேற்படி பழனிசாமி செட்டியார் குடும்பத்திற்கு எவ்வளவு நிலம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

4) என் முன் விற்பனையாளர்களான கிருஷ்ணசாமி செட்டியார் மற்றும் J.U.ராமலிங்கம் ஆகியோர் மேற்படி பழனிசாமி செட்டியார் மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்த ஏதேனும் நிலங்களை கிரயம் பெற்றுள்ளனரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 1988 ம் வருத்தில் நான் என் சொத்தை கிரயம் பெற்ற போது அதில் தடவழி உரிமை உள்ளதா என்பது குறித்து என் முன்விற்பனையாளர்களது மூல ஆவணங்களை பெற்று, பரிசீலனை செய்தேனா என்றால், இல்லை. ஆனால், எனது நிலத்திற்கு தடவழி ஏற்படுத்தியுள்ளதாக என் முன்விற்பனையாளர்கள் சொன்னதன் பேரில் நான் கிரயம் பெற்று, அனுபவித்து வருகிறேன்.

5) தாவா தடவழி 20 அடி அகல பாதை என நான் சொல்லும் நிலையில், மேற்படி தடவழி அமைந்துள்ள நிலம் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்பது குறித்தோ, மேற்படி தடவழியானது பட்டா நிலத்தில் உள்ளதா அல்லது அரசுக்கு சொந்தமான நிலம் எதிலேனும் அமைந்துள்ளதா என்பது குறித்து நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. ச.எண்கள்.226/8, 227/1 ஆகியவை தனி நபர்களுக்கு சொந்தமான பட்டா நிலங்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

6) இவ்வழக்கில் பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்து அதில் மேற்படி ச.எண்.226/8 ல் உள்ள நிலம் பட்டா நிலம் என கூறியுள்ள விவரத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. ஆனால், என் முன் விற்பனையாளர்கள் ச.எண்.227/1 ல் தான் தடவழி விட்டதாக கூறியதன் பேரில் மேற்படி விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். என் முன் விற்பனையாளர்கள் ச.எண்.226/8 ல் எந்த நிலத்தையும் எனக்கு தடவழிக்காக அளிக்கவில்லை என்றால், சரிதான்.

7) அவ்வாறு என் முன்விற்பனையாளர்களே ச.எண்.226/8 ஐ பொறுத்து, எனக்கு எந்த உரிமையும் அளிக்காத நிலையில், மேற்படி ச.எண்.226/8 ல் தற்போது 20 அடி அகல தடவழி உள்ளதாக நான் உரிமை கோர இயலாது என்றால், சரியல்ல. என் முன்விற்பனையாளர்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.226/8 ல் உள்ள நிலத்தை ச.எண்.227/1 என தவறாக சொல்லி, எனக்கு விற்பனை செய்துவிட்டனர்

என நான் சொல்கிறேனா என்றால்,இல்லை. ஆனால், மேற்படி தடவழி ச.எண்.226/8 ல் உள்ளதா என்பது குறித்து எனக்கு தெரியாது.

8) அவ்வாறு ச.எண்.226/8 ல் உள்ள நிலத்தை பொறுத்து, என் முன்விற்பனையாளர்களுக்கு உரிமையில்லாத நிலையில், மேற்படி நிலத்தை பொறுத்து, பேரூராட்சிக்கு தடவழிக்காக தானம் வழங்க அவர்களுக்கு உரிமையில்லை என்றால், மேற்படி என் முன்விற்பனையாளர்கள் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தது உண்மைதான். ஆனால், ச.எண்.226/8 ல் உள்ள நிலத்தை தான் எழுதிக்கொடுத்துள்ளனரா என எனக்கு தெரியாது.

9) தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்த வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ல் ச.எண்.227/1 ல் தடவழி ஏதுவும் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால், ச.எண்.227/1 பழைய சர்வே எண் ஆகும். தற்போது புதிய சர்வே எண் என்ன என்பது எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தின்படி ச.எண்.227/1 ல் தடவழி உள்ளதாக அவர் சொல்லவில்லை என்றால், சரிதான். ஆனால், என் முன்விற்பனையாளர்கள் ச.எண்.227/1 ல் தான் எனக்கு தடவழி காட்டி விற்பனை செய்தனர்.

10) தற்போது வரை ச.எண்.227/1 லோ அல்லது ச.எண்.226/8 லோ என் கிரய நிலத்திற்கு தடவழி உள்ளதாக வருவாய் துறை ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், தடவழி தொடர்பாக தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.